www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 50

பகுதி - 1

**சரியான விடையைத் தேர்வு செய்க:-** 6×1=6

1) கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
   அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
   ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
2) பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
3) பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ______
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
4) மரவேர் என்பது ______ புணர்ச்சி
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
5) 'அதிரப்புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
   ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்
6) குடும்ப விளக்கு ______ படைப்புகளுள் ஒன்று
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) காரியாசான் ஈ) வைரமுத்து

பகுதி - 2

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க:-** 3×2=6

7) மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
8) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
9) இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
10) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
11) உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

பகுதி - 3

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க:-** 3×3=9

12) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
13) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
14) விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
15) முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?
16) ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

பகுதி - 4

**அடிமாறாமல் எழுதுக.** 1×3=3

17) பூவாது காய்க்கும் மரம்...... எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

(அல்லது)

கல்லிடைப் பிறந்த ஆறும் ....... எனத் தொடங்கும் இராவண காவியப் பாடலை எழுதுக.

CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

## பகுதி - 5

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 4×3=12

18) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



19) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே திறந்து காட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது.

அ) வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு எதற்கு இருந்தது?
ஆ) மகிழுந்தின் பின்பக்கம் இருந்த பொருள்கள் யாவை?
இ) பத்திக்கு ஏற்ற தலைப்பு இடுக

20) மொழிபெயர்க்க:-
அ) Strengthen the body ஆ) Love your food இ) Union is strength

21) இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க
அ) அலுவலர் வந்தார் ; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
ஆ) கடற்கொடி பாடினாள் ; மாலன் பாடினான்.
இ) பழனிமலை பெரியது ; இமயமலை மிகப்பெரியது

22) கலைச்சொல் தருக. அ) Social Reformer ஆ) Volunteer இ) Cave temple

## பகுதி - 6

1×7=7

23) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

## பகுதி - 7

விரிவான விடை தருக. 1×7=7

24) அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

*****/*****

CamScanner